914

..d. M. 1803. JULY 1928 Vol. V. No. 12.

No.
10 AUG 1928

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் – – – – – அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை. உடல் திக்கானபட்டு: தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்.

கிடைக்கவில்லையே! என்றுவருந்தவேண்டாம்.

ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும் ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால் இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில். பால்போன்ற வெள்ளை. கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங். உறுதியான தையல். உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும். காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1 டுயில் ஷர்ட் 1-க்கு விலை ரூ. 2—0—0.
,, 2 காக்கி ஷர்ட் விலை ரூ. 2—4—0.
,, 3 இங்கிலீஷ் டுயில் ஷர்ட் ரூ. 2—4—0.
,, 4 அமெரிக்கன் டோரியா ரூ. 2—4—0.
,, 5 உசத்தி பாப்ளின் ஷர்ட் ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

ஓம்

OFFICE OF THE REGISTRAR
No.
1? AUG 1929
MADRAS

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரிக்கப்படும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	விபவஞு ஆடிமீ 1928 ஜூலை	இதழ் 12.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 495
2.	கண்ணன் குறும்பு	... 496
3.	மரிக்காதிருக்க மருந்துண்டா ? ...	... 497
4.	தமிழ் எழுத்துக்கள்	... 503
5.	நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத்தலைவன்	... 508
6.	மதுசாரம்	... 513
7.	கவிச் சக்கிரவர்த்தி ரவீந்திரர் ...	... 519
8.	தருமம் தலைகார்க்கும்	... 523
9.	விசேஷக் குறிப்புகள்	... 526

படம்.

(1)	ஸ்ரீமதி. பவித்ரன்	... 502
(2)	ஸ்ரீமதி. சீதா தேவதாஸ்	... 507
(3)	ஸ்ரீமதி. சாரதாபாய் நாயுடு, ஸ்ரீ. ஆர். எம். ஏ. முத்தையா செட்டியார் பி. ஏ.	... 512
(4)	மகாத்மா காந்தி	... 522

ஆவணக் காப்பக நூலகம்
1/1028
சென்னை-600 008

சந்தா நேயர்களுக்கு.

முக்கிய கவனிப்பு.

முன் அறிவித்தபடி ஆகஸ்டு மாத லக்ஷ்மியை கிரௌன் 6 பாரம்—48பக்கம் கொண்ட பெரிய அளவில் வெளியிட உறுதி செய்து விட்டோம். ஏராளமான ஆப்டோன் படங்களும் ஹாஸ்யப் படங்களும் மாதா மாதம் வெளிவரும். நம் சந்தா நேயர்கள் முன் போலவே "லக்ஷ்மி"யை ஆதரிப்பது மன்றி புதுச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்தும் உதவி புரியுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி 99, சென்னை.

லக்ஷ்மி துதி

உள்ளக் கமலத்தில் வந்துவந்
தாடும் உன தருளிவ்

வெள்ளக் கமலப் புவியோர்முன்
சற்று விளங்கல் என்றோ ?

கள்ளக் கமலனைப் பெற்றுன்னெங்
நாளும் கலந் துவகை

கொள்ளக் கமலமலர் மேல்
குலாவிய கோல்வளையே !

கண்ணன் குறும்பு.

அயலகத்தார் முறைப் பாடு.

(1) ஆற்றி லிருந்து விளையாடு வோங்களை
சேற்றா லெறிந்து வளைதுகில் கைக்கொண்டு
காற்றின் கடியனாய் ஓடி அகம்புக்கு
மாற்றமும் தாரானால் இன்று முற்றும்
வளைத்திறம் பேசானால் இன்று முற்றும்.

(2) குண்டலம் தாழ குழல்தாழ நாண்தாழ
எண்டிசை யோரும் இறைஞ்சித் தொழுதேத்த
வண்டமர் பூங்குழலார் துகில்கைக் கொண்டு
விண்தோய் மரத்தனால் இன்று முற்றும்
வேண்டவும் தாரானால் இன்று முற்றும்.

(3) தடம்படு தாமரைப் பொய்கை கலக்கி
விடம்படு நாகத்தை வால்பற்றி ஈர்த்து
படம்படு பைந்தலை மேலெழப் பாய்ந்திட்டு
உடம்பை யசைத்தானால் இன்று முற்றும்
உச்சியில் நின்றானால் இன்று முற்றும்.

(4) ஆய்ச்சியர் சேரி அளைதயிர் பாலுண்டு
பேர்த்தவர் கண்டு பிடிக்கப் பிடியுண்டு
வேய்த்தடந் தோளினால் வெண்ணெய்கொள் மாட்டாதங்கு
ஆப்புண் டிருந்தானால் இன்று முற்றும்
அவையுய்யக் கொண்டானால் இன்று முற்றும்.

(5) தள்ளித் தடர்நடை யிட்டு இளம்பிள்ளையாய்
உள்ளத்தினுள்ளே அவளை யுறநோக்கி
கள்ளத்தி னால்வந்த பேய்ச்சி முலையுயிர்
துள்ளச் சுவைத்தானால் இன்று முற்றும்
துவக்கற வுண்டானால் இன்று முற்றும்.

(6) வானத் தெழுந்த மழைமுகில் போல்எங்கும்
கானத்து மேய்ந்து களித்து விளையாடி
ஏனத் துருவாய் இடந்த இம்மண்ணினை
தானத்தே வைத்தானால் இன்று முற்றும்
தரணி யிடந்தானால் இன்று முற்றும்.

(பெரியாழ்வார்.)

மரிக்காதிருக்க

மருந்துண்டா?

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

நமது வாழ் நாள் மிகச் சொற்பமாக இருக்கிறது. நாம் நூறு வயது வாழ்ந்தாலும் ஐம்பது வருஷம் உறக்கத்தால் பாழாகின்றது. மீதியுள்ள ஐம்பதில் ஒருபகுதி இளமையிலும் ஒரு பகுதி முதுமையிலும் வீணுகின்றன. ஆகவே மீதமுள்ள சொற்ப காலத்தில் இந்தப் பென்னம்பெரிய உலக சுகங்களை நாம் எவ்வாறு பூரணமாக அனுபவிக்க முடியும்? அற்பாயுளுடையவராயிருப்பதைவிட நாம் சிரஞ்சீவிகளாயிருந்தால் இவ்வுலக சுகங்களைச் செழிக்கச்செழிக்க அனுபவிக்கலாமே. ஆகவே மரிக்காதிருக்க ஒரு மருந்து அகப்படின் அதை யார் தான் கைப்பற்ற விரும்பார்கள்.

நமது நாட்டிலும் சிரஞ்சீவிகளாய் வாழ நமது முன்னோர்கள் கல்பங்கள் கண்டு பிடித்ததாகக் கூறப்படுகிறது. அது மெய்யோ, பொய்யோ, நமக்கொன்றும் தெரியாது. இந்நாளில் அது பாட்டிக் கதையாகவே மதிக்கப் படுகிறது. ஆனால் விஞ்ஞான சாஸ்திர நிபுணரான மேனுட்டார் அவ்வழி இப்பொழுதும் சதா ஆராய்ச்சி நடத்திக்கொண்டே இருக்கின்றனர். குரங்கின் உறுப்பைக் கிழவர்களின் தேய்ந்த அதே உறுப்புக்குப் பதிலாக இணைத்துவிட்டால் அக்கிழவன் குமரன் ஆகிவிடுவானென சில விஞ்ஞான சாஸ்திரிகள் அபிப்பிராயப் படுவதையும் அத்தகைய குரங்குறுப்பு இணைப்புகள் நடைபெறுவதையும் நாம் பத்திரிகைகளில் படித்திருக்கிறோமல்லவா? மனிதனை அமர்த்தியனுக்குவதற்கு இன்னும் பல இரணச்சிகிச்சை செய்தும் மேனுட்டார் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

வீயன்னு வாசியான டாக்டர் காரல் டோப்லர் வெகு காலமாக நடத்திய ஆராய்ச்சியின் பலனை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார். கர்பாணிக் ஆஸிட் என்னும் விஷவாயுவை ஒரு மருந்துடன் சேர்த்து மனிதப் பிரேதத்தினுள்ளே செலுத்திவிட்டால்

இரத்த ஓட்டம் மீண்டும் ஆரம்பமாகி இறந்தவன் உயிர்த்தெழுவா னென அவர் அபிப்பிராயப் படுகிறார்.

பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா, ஜப்பான் முதலிய தேசங்களில் இறந்தவனைப் பிழைப்பிக்கப் பிரதி தினமும் நடைபெறும் ஆராய்ச்சி வரலாறுகளைக் கேட்டால் நம்மவர்கள் திடுக்கிட்டுப் போவார்கள். இறந்தாரை உயிர்ப்பிக்கலாம் என்ற பூரண நம்பிக்கையுடன் அல்லும் பகலும் உழைத்து வரும் அந்த விஞ்ஞான சாஸ்திரிகளின் விடா முயற்சியை என்னென்றுரைப்பது!

விஞ்ஞான சாஸ்திரிகள் மரணத்தை வெல்ல வெகு காலமாக நடத்தி வரும் அதி தீவிரப் போராட்டத்தினால் சிறிதளவு பயன் உண்டாயிருக்கிறதென்றே சொல்லலாம்! இதுகாறும் இருள் மயமாயிருந்த அந்தப்பிரச்னை இப்பொழுது சிறிது பிரகாசமடையத் தொடங்கியிருக்கிறது. நாம் வாழ்நாளை 70, 100, 150, 200, வருஷம் வரை நீட்ட முடியுமென விஞ்ஞான சாஸ்திரிகள் நம்புகிறார்கள்; அந்நம்பிக்கை உண்மையாகுமானால் சிரஞ்சீவியாகவும் வாழ முடியுமென்று ஏன் ஊகிக்கக் கூடாது? பஞ்ச பூதங்களையும் வென்ற விஞ்ஞான சாஸ்திரிகள் மரணத்தை மட்டும் வெல்லச் சக்தியற்றவர்கள் ஆய் விடுவார்களா?

நாம் ஏன் இறக்கிறோம்? இது தான் சிதம்பர இரகசியம் மரணத்தின் காரணத்தை ஒருவரும் அறியார். பூரண சுகத்தோடு இருக்கும் இளைஞர்கள் திடீரென மரிக்கின்றனர். நோய் வாய்ப்பட்டு என்புக்கூடாய் இருக்கும் கிழவர்கள் நைந்து நைந்து உயிர்தாங்கிக் கிடக்கிறார்கள். மூப்பெய்தி இறப்போர் தொகை மிகச் சொற்பமாய் விட்டது. 30, 40 வயதில் பலவீனராகி விருத்தாப்பிய தசையை அடைபவரே ஜாஸ்தியாகக் காணப்படுகிறார்கள். இதன் காரணத்தை அறிய விஞ்ஞான சாஸ்திரிகள் நடத்திய ஆராய்ச்சிகளனைத்தும் இதுவரை அநேகமாக வீணாயின வென்றே சொல்லவேண்டியதா யிருக்கிறது. இயல்பாகவே உண்டாகும் சில கண்ணறைகள் (Cells) காரணமாக உயிருண்டாகிறதென்று விஞ்ஞான சாஸ்திரிகளெல்லாம் ஒரு முகமாக அபிப்பிராயப் படுகின்றனர். வருஷந்தோறும் மனித சரீரத்தில் அனேக புதுக் கண்ணறைகள் அழிகின்றனவாம்; அழிந்த கண்ணறைகளின் ஸ்தானத்தில் புதுக் கண்ணறைகளும் தோன்றுகின்றனவாம்; இந்தப்

யுதுக் கண்ணறைகளின் தோற்றமே வியப்புக்கிடமானதாக இருக்கின்றது.

ஆனால் சில காலங்களுக்குப் பிறகு அழிந்த கண்ணறைகளின் ஸ்தானத்தில் புதுக்கண்ணறைகளைத் தோற்றுவிக்கும் சக்தியை உடம்பு இழந்து விடுகின்றதாம். அந்த சக்தியைப் பூர்ணமாக இழக்கும்போது மரணமும் உண்டாகின்றது. ஆகவே தடுத்த் தடையின்றி எந்நாளும் புதுக் கண்ணறைகள் தோற்றுவிக்கும் உபாயம் கண்டுபிடிக்கவே மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் இப்பொழுது ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள். இந்தக் கண்ணறைத் தோற்றத்தின் காரணத்தைப் பற்றிப் பலர் பலவாறாக அபிப்பிராயப் படுகின்றனர். குரங்கின் உதவியால் மனிதன் எந்நாளும் குமாரனாயிருக்கும்படி செய்து விடலாமென்று பாரீஸில் பெயர் பெற்ற டாக்டரான வோரோனோப் என்பவர் அபிப்பிராயப் படுகிறார். உடம்பில் சில இரணச்சிகிச்சைகள் நடத்தி விட்டால் மனிதன் அழியாக் குமாரனா யிருப்பானென்று ஸ்டிநாச்சு என்னும் சாஸ்திரியார் கூறுகிறார், அமெரிக்காவில் ராக்பெல்லர் இன்ஸ்டிட்யூட்' என்ற விஞ்ஞான ஆராய்ச்சி சாலையில் ஆராய்ச்சி நடத்தும் அலக்ஸிஸ் காரல் என்பவர் வேறு விதமாக அபிப்பிராயப்படுகிறார். அவரது அபிப்பிராயம் மிகவும் ரஸகரமானதென்று ஒப்புக் கொண்டே தீரவேண்டும்.

டாக்டர் காரல் பிரஞ்சு மரபினர். பல அற்புத இரணச்சிகிச்சைகள் நடத்திப் பெயர் பெற்றவர். அவர் ஆராய்ச்சிச் சாலையில் ஒரு கோழியின் ஹிருதயத்தை 12 வருஷங்களுக்கு முன் கொண்டுவந்து வைத்தார். அது இப்பொழுதும் உயிருடனேயே இருக்கிறது. அந்தக் கோழியின் பிற உறுப்புக்களை சமாதி செய்து 12 வருஷமாய் விட்டது.

அந்தக் கோழியின் ஹிருதயத்தில் அடிக்கடி மூப்புக் குறி பிரத்தியட்சமாகுமாம். அவ்வாறு பிரத்தியட்ச மாகும்போது கண்ணறைகள் களைப்படைந்து தோன்றுமாம். கண்ணறைகளின் தொகையும் குறைந்து காணப் படுமாம். ஒரு மனிதன் கிழப்பருவமடையும்போது அவனுடைய ஹிருதயம் எந்நிலைமையி லிருக்குமோ அந்நிலைமையில் அப்பொழுது கோழியின் ஹிருதயம் இருக்குமாம். அவ்வாறு அக்கோழி ஹிருதயம் தளர்ச்சி யடையும் போது டாக்டர் காரல் ஒருவகை நிராவகத்தில் அதைத்தோய்த்து

வைப்பாராம்; உடனே கோழி ஹிருதயம் மீண்டும் இளமைப் பருவ மெய்துமாம்; ஒரு திவ்ய சக்தியும் அதில் புலனுகுமாம்.

இந்த முறையை மனித ஹிருதய விஷயமாகவும் கையாண்டு மனிதனையும் எந்நாளும் இளமைப் பருவத்தில் வைத்திருக்கலா மென்று பிரபலர்களான விஞ்ஞான சாஸ்திரிகள் அபிப்பிராயப்படு கின்றனர். டாக்டர் காரல், டாக்டர் ஹாரிசன், பிரிட்டிஷ் விஞ் ஞான நிபுணரான ஸர் ஏனஸ்ட்ருதல் போர்டு முதலியோர் இது விஷயமாக ஆராய்ச்சி நடத்தி வருகிறுர்கள். மனித உறுப்புக்கள் உடம்பிலிருந்து வேறு படுத்தப்பட்ட பின்னும் வளருந் தன்மை யுடையனவென்று அவர்கள் அனுபவத்தினல் அபிப்பிராயப் படுகி ருர்கள், மனிதன் மூப்பெய்தாக் குமரனுய் எந்நாளும் வாழும்படி செய்யத் தன்னுலாகுமென்று டாக்டர் காரல் உறுதி கூறுகிருர். அவரது முறை தவருது பலிக்குமென்று அவர் முழுதும் நம்பு கிருர். ஆனுல் வேர்னேபோ என்னும் விஞ்ஞான சாஸ்திரி டாக்டர் காரலின் அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இரத்தக் கண்ணறைகள் இளைப்புறுவதினுல் மூப்புண்டாகிற தென்றும் இளைப்புற்ற இரத்தக் கண்ணறைகளின் ஸ்தானத்தில் புது இரத் தக் கண்ணறைகளை வைத்து விட்டால் மனிதன் எந்நாளும் இள மையோடிருப்பா னென்றும் அவர் அபிப்பிராயப் படுகிருர்.

மனித உறுப்புக்கள் மூத்துக் களைப்படையும்போது அவ் வுறுப்புக்களுக்குப் பதிலாக வாலில்லாக் குரங்குகளின் (மனிதக் குரங்குகளின்) உறுப்புக்களை இணைத்து விட்டால் மனிதன் எவ் வாறு குமரனுவானென்று பலர் சந்தேகங் கொள்ளலாம். மனித னுக்கு அடுத்தபடியாகவுள்ள பிராணி மனிதக் குரங்காகையால் அதன் உறுப்பு மனித உறுப்புக்குப் பொருத்தமான தென்றும் ஆகவே குரங்கினுறுப்பினுல் மனிதன் உரம்பெற முடியு மென் றும் வேர்னேபோ வாதிக்கிருர். அன்றியும் குரங்கின் இரத்தத் துக்கும் மனித இரத்தத்துக்கும் பெரிய வித்தியாச மொன்று மில்லையென விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியால் அறிவுறுத்தப் பட் டிருக்கிறது.

டாக்டர் ஸ்டிநாச்சிஸ் அபிப்பிராயத்தையும் இந்த சந்தர்ப் பத்தில் நாம் அறிய வேண்டியது முக்கிய மாகும்.

சில முக்கியமான இரத்தக் கண்ணறைகளை இரணச் சிகிச்சை மூலம் சுத்தி செய்து விட்டால் மனிதனுக்கு களைப்பும் மூப்பும்

மரணமும் உண்டாகாதென்று அவர் அபிப்பிராயப் படுகிறார். அவரது இரணச் சிகிச்சைகள் இப்பொழுது முன்னையவிட ஏராளமாக நடைபெற்று வருகின்றன.

இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாக பல உண்மைகள் வெளியாயிருக்கின்றன. ஆனால் திட்டமான பலனளிக்கும் ஒரு முறை கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாகச் சொல்வதற் கில்லை. ஒரு புட்டிச் சாராயம் குடிப்பவனுக்கு சிறிது பொழுது உற்சாகமாக இருக்க முடிவதுபோல் இத்தகைய இரணச் சிகிச்சைகளாலும் களைப்படைந்த மனித உறுப்புகளில் சில நேரம் ஒரு வளர்ச்சி காணப்படுகிறது.

பெண்களும் புருஷர்களும் 20, 30, அல்லது 40 வயதாகும்போது இளமைப் பேற்றுக்குரிய மருந்துகளை உண்டால் நலன் விளையுமென்று ருசுவாயிருக்கிறது. மூப்பெய்திய பின் மருந்துண்பதினால் ஒரு நன்மையு முண்டாகாது. எனினும் அங்கப் பழுதுடையவர்களும் பிரபல பண்டிதர்களின் மருந்தினால் சுகம் பெற்றிருக்கிறார்கள் என்பதும் மறுக்கத் தக்கதல்ல. அத்தகைய அற்புத சம்பவங்கள் மேனாடுகளில் பிரதிதினமும் நடை பெற்ற வண்ணமா யிருக்கின்றன. எனினும் நோயாளிகளை யெல்லாம் ஆரோக்கிய முடையவர்களாக்கி விடலாமென்று சொல்லும் நிலைமை இன்னும் ஏற்படவில்லை. 80 வயதுடையவரை 100 வயது வாழச் செய்யவுங்கூட இதுகாறும் சாத்தியப்பட வில்லை. ஆனாலும் ஆயுளை நீட்ட முடியுமென்று விஞ்ஞான சாஸ்திரிகள் பூரண நம்பிக்கையுடன் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள்.

அன்னோர் ஆராய்ச்சி பயனடைவதாக !

வயிற்றுப் போக்கு வியாதியானது மலத்தினாலும், பால், ஜலம், ஆகாரம், தூசி, அல்லது ஈக்கள் இவைகள் மூலமாகவும் வியாபகமடைகின்றது. வயிற்றுப் போக்கு வியாதியுள்ளவர்களைத் தனிப்படுத்தி வைத்து, அவர்களுடைய மலத்தில் நச்சுக் காற்று மருந்தைத் தெளிக்கவேண்டும்.

* ” * * *

பச்சை கோழி முட்டையானது சுலபமாக ஜீரணமாகி விடும்; அடுத்த படியாகச்சுமாராகவே சமைத்த கோழிமுட்டைகள் ஜீரணமாகும்; வறுத்தவைகள் அவ்வளவு சுலபமாக ஜீரணமாவ தில்லை.

ஸ்ரீமதி பவித்ரன்.

இம்மாது தீயர் வகுப்பைச் சேர்ந்தவர். முதன் முதலாக கோச்சி சமஸ்தானச் சட்ட சபையில் அங்கத்தினராக நியமனம் பெற்றவர்,

தமிழ் எழுத்துக்கள்

(ஸ்ரீ மோகனூர். கி. வா. ஜகந்நாதன் எழுதியது.)

மன்பதை யுலகத்து மக்கட்கெல்லாம் உள்ளெழூஉம் உணர்வைத் தெள்ளெனத் தெரிக்கச் சீர்பெறும் மொழி துணை செய்வதொன்றாகும். அம்மொழியுட் பேசுங்கால் தம்முள்ளுணர்வைச் சொற்றொடர்களாக அமைத்துக் கிளத்துவர். அத்தொடர் பல சொற்களைத் தன துறுப்புக்களாகக் கொண்டிருக்கும். அச்சொல் பல வெழுத்துக்களானியலும். எழுத்துக்கள் மொழிக்கு முதல் உறுப்புக்களாம்.

"மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல் சார் பெனவிரு வகைத்தே"

என்பர் நன்னூலார். அவ்வெழுத்து ஒலி வடிவம் வரிவடிவம் என இருவடிவம் பெறும். பேசப்படுங்கால் எழும் எழுத்தின் ஒலியே ஒலிவடிவமாம். கட்புலனுக் குணர்வாம் வரிவடிவம் எழுதப் படுவதாம்.

உலகிலியங்கும் பல் வேறு மொழிகளும் தத்தமக்கென வரையறுக்கப்பட்ட எழுத்துக்களைக் கொண்டிருக்கின்றன. சுருங்கிய தொகையில் தம்மெழுத்துக்களை யமைத்துக்கொண்ட மொழிகளும் பெரிய தொகையிலெழுத்துக்களைக் கொண்ட மொழிகளும் உள. முன்னர்க் கிளர்த்தியன ஆங்கிலம், பிரெஞ்ச்போன்றன. பின்னர்க் கிளத்தியன வடமொழி முதலியன. தமிழ்மொழி விரிந்தும் சுருங்கியும் இல்லாமல் நடுநிலை பெற்றிலங்குவதாம்.

எழுத்துக்களை இம்முறையிற் பயிலவேண்டும் என்ற விதி சில மொழிகளுக்கே உள. தொன்றுதொட்டே ஒரே நிலையிற் பயிலப்படுவதெனின் எழுத்துக்களுக்கு அமைந்த இலக்கணம் இருக்கும். இல்லையெனில் இன்றாம். மேனாட்டு மொழிகளுட் பெரும்பாலனவை அடிக்கடித் தமது வரி, ஒலி வடிவங்களில் மாற்றம் பெற்றே யியங்குகின்றன. பலநூற்றாண்டு கட்கு முன்னர் ஆங்கில எழுத்துக்கள் இன்றைய உருவத்தைப் பெற்றிருக்க வில்லை. அவைகளினுருவிற்கும் இன்றைய வெழுத்துக்களின் உருவிற்கும் உள்ள வேற்றுமை சாலவும் பெரிதாம் நம் நாட்டு மொழிகளின் பிறப்பிற்குப்பல்லாண்டுகட்குப் பின்னரே யெழுந்ததொன்றாகலாலும், உற

தியாய இலக்கணங்கள் முன்னரே யமைந்திராமையானும் இத் தகைய மாற்றங்கள் நிகழ்ந்தன. எழுத்துக்களில் மட்டுமன்று, இலக்கணம், நடைமுதலியனவற்றினும் வேற்றுமையே காணப்படு கின்றது.

வடமொழி சிறந்த இலக்கண மமைந்ததேயாம். அதன் இலக் கணத்தைப் பிற்காலத்தில் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் ஆதியவர்களும் பிறரும் கடன் வாங்கிக் கொண்டார்கள். எழுத் துக்களின் ஒலிவடிவம் எங்கணும் ஒரே முறையிற் பயிலப்படுகின் றன. எனினும் வரிவடிவம் வேற்றுமை பல செறிந்து ஆங்காங்கே வரையப்படுகின்றன. வடநாட்டார் வடமொழிக்கு வரிவடிவாய் நாகரம் என்ற எழுத்தை உபயோகிக்கின்றனர். அஃதும் தலைக் கோடிட்ட ஒருவகை உருவிலும் அக்கோடில்லாத ஒருவகை உரு விலும் உணர்த்தப் படுகின்றது. தெலுங்கர், கன்னடர் தங்கள் எழுத்துக்களிலேயே வடமொழியை யமைத்துக் கொள்கின்றனர். அவர்கள் மொழி அவ்வண்ணம் ஆக்குதற்கியன்றனவாயமைந்துள.

தமிழர்களும் மலையாளிகளும் தங்களுக்கென வடமொழிக் குக் கிரந்தமென்ற வரிவடிவத்தைக் கொண்டனர். அவ்வெழுத் துக்கள் தமிழெழுத்துக்களைச் சிறிது மாற்றி ஆக்கப்பட்டனவாம். ஹிந்தி, குஜராத்தி, வங்காளி முதலிய மொழியாளர்கள் மேற் குறித்த நாகர எழுத்தைச் சில உருவேற்றுமை செய்து தம்மொழி கட்கேற்று எழுதிவருகின்றனர்.

தெலுங்கும் கன்னடமும் ஒன்றற்கொன்று பிணைப்புடைய எழுத்துக்களையே கொண்டுள்ளன. மலையாள எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களைச் சார்ந்தனவே.

இத்தகைய வெழுத்துக்களுள் பலவும் ஒவ்வொன்றைச் சார்ந் தே இருப்பதனால் அவை ஆதி முத லவ்வடிவிலேயே நிகழ்ந்தன எனக்கூற வியலாது. பொதுவில் வரிவடிவங்களுக்கு இலக்கணம் பெரும்பாலான மொழிகட்கில்லை. தமிழ் மொழி தொன்று தொட் டே ஒரே வண்ணமாய வெழுத்துக்களைக் கொண்டுள்ளன வென்ப தற்குப் போதிய சான்றுள. பண்டைய சிலா சாஸனங்கள் எட்டுப் பிரதிகள் இவைகளில் பயின்றிலகும் வரிவடிங்கள் இன்றைய வெழுத்துக்களைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. சிறு பான் மையே வேற்றுமை காணப்படுகின்றது. அஃதும் எழுதுவோர் பழக்கத்தை யொட்டியே வந்த மாற்றம் ஆகும்.

தொல்காப்பியத்தில் எழுத்துக்களின் எல்லா உருவத்தையும் கூறவில்லை. புள்ளியுடைய எழுத்துக்களைப் பற்றியே கூறப்பட்டுள்ளது. ஏனெனில், பண்டைய ஏட்டுச் சுவடிகளில் காணப்படும் எழுத்துக்களில் பலரும் புள்ளியைப் புறக்கணித்தே எழுதி வந்த வழக்கம் காணப்படும். "வேங்கை நுண்டா தப்பிக் காண்வர" என்பது, "வேங்கைநுணடாதபபிககாணவர" என்றே வரையப்பட்டிருக்கும்; இத்தகைய பழக்கம் முறையன்றென்பதை யறிந்து கொள்ளவும் எழுத்துக்களின் மெய்யுருவத்தை யறிந்து கொள்ளவும் வேறுபட்ட எழுத்துக்களின் உருவத்தை உணர்த்தினரென்க. தொல்காப்பியர் காலத்தில் மகரம் உள்ளே ஒரு புள்ளியிட்டும் எ, ஒ இந்த விரண்டும் தலையிற் புள்ளியிட்டும் எழுதப்பட்டு வந்தன. இதனை

அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை
உட்பெறு புள்ளி உருவா கும்மே.

(தொல்-எழுத்-நூன்மரபு)

எகர ஒகரத்தி யற்கையும் அற்றே. ஷ

என்பவைகளால் அறிக.

மெய்கள் தலைப்பில் புள்ளியிட் டெழுதப்பட்டு வந்தன. அவ்வழக்கம் இன்றளவும் நிலை பெற்றிருக்கின்றது

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்

(தொல்-எழுத்-நூன்மரபு)

நன்னூலார் காலத்தில் மகரம் உட்பெறு புள்ளி பெறவில்லை. எனினும் எகர ஒகரங்கள் தலைப்புள்ளியுடனே இருந்து வந்தன.

தொல்லை வடிவின வெல்லா மெழுத்துமாண்
டெய்தும் எகரம் ஒகரம் மெய் புள்ளி.

(நன்னூல்-எழுத்ததிகாரம்-எழுத்தியல்)

என்பதனல் இதனையும் மெய்களும் புள்ளியுடன் இன்றுபோலவே வழங்கி வந்தன வென்பதனையு மறிக.

புள்ளியின்றி நின்ற மெய்கள் அகரத்தோ டுச்சரிக்கப்படுவது காண்க. இஃது பண்டைய அமைப்பே யாதலை

புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்

என்றமையானும் (தொல்—நூன்மரபு)

புள்ளிவிட்டு அவ்வொடு முன் உரு ஆகியும்

என்றமையானும் அறிக. (நன்-எழுத்தியல்)

இனிச் சென்ற சில வருடங்களுள் தமிழ் எழுத்துக்களுட் சில உருத்திரிந்தன. னை, ணை, லை, ளை, முதலிய எழுத்துக்களுக்கு முன்னுள்ள வளைவு நீக்கப்பட்டுக் க என்ற எழுத்தும் ஒன்றிப் பிணைந்த இருவிதத்தில் அவ்வெழுத்துக்கள் சிறுபான்மை எழுதப் படுகின்றன. ஈ என்று இப்பொழுது வழங்கும் வடிவிற்குப் பதில் இகரத்தின் விசிறி முடிவில் சுழியிட்டு வழங்கினவரும் உளர். ந என்ற எழுத்து இப்பொழுது காலையிழந்தும் வழங்கி வருகின்றது. பிறமொழிகள் பெற்ற பெருமாற்றம் நம்மொழிக்கண் இல்லை. என்னெனில் இலக்கணங் கொண்ட மொழியாதலின் என்க.

இவ்வாறு தொன்றுதொட்ட பழக்கத்தின் முதிர்ச்சியினால் தமிழுக்கு வரிவடிவம் என்றும் இளமையுடன் இலங்குகின்றது. பிறமொழிகள் போன்று பல உருவங்கள் பெறவில்லை. பிறமொழி யினின்றும் இரவல் பெறவும் இல்லை. அன்றிக் காலக் கடவுள் வாய்ப்பட்டுச் சிதைவுறவும் இல்லை. கிரந்தம் மலையாளம் முதலிய வைகளுக்கு தனதுவடிவத்தின் நிழலையருளிய பெருமை உண்டு. எனவே பண்டையத் தமிழர்கள் மொழிக்கு எத்துணை வன்மை யுடன் அடிநிலை கோலியிருத்தல் வேண்டும்! அதனைப் பின் பற்றி அவர் தம் ஆக்கத்திற் கூறு நேராவண்ணம் காத்தலே நாம் செய்ய வேண்டிய கடமையாம்.

அமயம் நேரின் தமிழின் வரிவடிவைக் குறித்தும் எழுது வோம்.

வீட்டு ஈக்கள் தாம் வியாதிக் கிருமிகளை முக்கியமாய்ச் சுமந்து செல்கின்றன. காலரா, ஸன்னி பாத ஜுரம், வயிற்றுப்போக்கு, அதிஸார சம்பந்த வியாதிகள் வியாபகமடைவதற்கு ஈக்களே காரணமாக இருக்கின்றன. ஈக்கள் உற்பத்தியாகாமல் தடுப்ப தற்கு நம் வீட்டிலாவது, வீட்டைச் சுற்றியாவது குப்பை கூளம் சேர்ந்திருக்கும்படி விட்டுவைத்தல் கூடாது.

சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் கனம் தேவ தாஸ் பிள்ளை யவர்கள் புத்ரி ஸ்ரீமதி. சீதா தேவ தாஸ், சென்னையில் முதன் முதலாக பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவர்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதியது.)

14-ம் அத்தியாயம்.

கள்வர் தலைவன்.

சிவாஜியின் சேனை வருகிறதென்று கேட்டதும் குடி மயக்கத்தினால் தூங்கும் வேங்கடவாகுவுக்குச் சற்று சுறு சுறுப்புத் தோன்றியது. உடனே அவன் எழுந்திருக்க முயன்றான். குடி மயக்கம் அவனை எழுந்திருக்க விடவில்லை. ஆகவே, வேலைக்காரன் ஒருவனை யழைத்துத் தண்ணீர் கொண்டுவந்து தன் தலையில் கொட்டும்படி கட்டளையிட்டான். அவ்விதமே குடம் நிறையத் தண்ணீர் கொண்டுவந்து அவன் தலையிலும் முகத்திலும் ஊற்றினார்கள். அதன் பின்னர் தான் அவன் மயக்கந்தெளிய ஆரம்பித்தது. உடனே அவன், வருகிற சேனையை எதிர்ப்பதற்கான தகுந்த வற்பாடுகளைச் செய்யலானான். தன் ஆட்களாகிய கள்ளர்கள் அனைவரையும் அழைத்து, குகை வாயிலுக்கு எதிரில், எதிரிகள் உள்ளே வாராதபடி, மதில் சுவர் எழுப்பும்படி கட்டளையிட்டான். உடனே வேலை துவக்கப்பட்டது. பாறைக் கற்களையும் மரக்கட்டைகளையும் கொண்டு மதிற் சுவர் அமைக்கப் பட்டது.

இவ்விதம் குகையின் வாய்ப்புறத்திற்கு எதிரில் மதிற் சுவர் அமைக்கப் பட்டதன் நோக்கமென்னவென்றால், முதலாவது எதிரிகள் சுலபமாக குகைக்குள் வர முடியாது; இரண்டாவது குகைக்குள் இருந்தபடியே, மதிற்சுவரில் மறைந்துகொண்டு எதிரியைத் தாக்க வசதியாக இருக்கும்; மூன்றாவதாக, கள்வர் தலைவனாகிய வேங்கடவாகுவுக்குத் தன் ஆட்களிடத்தில் நம்பிக்கையில்லை. சமயம் நேரிட்டால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தன்னை விட்டு விட்டு ஓடிப் போவார்கள் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால், ஒருவேளை தான் சண்டையில் தோல்வியடைவதாயிருந்தால், தன் ஆட்களில் ஒருவர் தவறாமல் சிவாஜியால் பிடிக்கப்பட்டுத் தன்னைப் போலவே கொல்லப்பட வேண்டும் என்பது அவன் எண்ணம். ஆகவே, குகைக்கு வேறே வழியில்லாதபடியால், கள்ளர்கள் தப்பி ஓட முடியாது என்று

யோசித்து, குகைக்குள்ளிருந்தே சண்டையிடுவதென்று தீர்மானித்து இவ்வித ஏற்பாடு செய்தான்.

அனேகமாய் சுவர் எழுப்பி முடிந்து விட்டது. கள்ளக் கூட்டத்தார் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இச்சமயத்தில் வேங்கடவாகு தன் சிறையாளிகளைப் பற்றி நினைத்துக் கொண்டான். சிவாஜி அவன் மேல் சண்டைக்கு வருவது, தாதாஜியையும் காசிபாயையும் சிறைப்பிடித்து வைத்திருப்பதனாலல்லவா? இச்சமயத்தில், தாதாஜியையும் காசிபாயையும் வேறே குகையில் வைத்திருந்தால், சண்டை நடக்குஞ்சந்தடியில் அவர்கள் சுலபமாக ஓடிப் போவார்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் அவர்கள் தப்பிப் போகாதபடி, சண்டை நடக்கப் போகிற பெரிய குகைக்கு அவர்களை அழைத்து வந்து விட்டான். கள்வர் தலைவன் என்ன செய்யப் போகிறானோ என்னும் திகிலுடன் தாதாஜியும் காசிபாயும் பெரிய குகைக்கு வந்தார்கள், வந்ததும் குகைக்கு எதிரில் புதிதாய் மதிற் சுவர் எழுப்பப் பட்டிருப்பதையும் கள்ளர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் ஆயுதங்களைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கு கூட்டமாய் நிற்பதையுங் கண்டு ஒன்றுந் தோன்றாமல் திகைத்தார்கள். அச்சமயத்தில், வேங்கடவாகு அவர்கள் அருகில் வந்து காசிபாயைப் பார்த்து. "கண்மணீ! காசிபாய்! அந்த சிவாஜிப் பயல் என்னுடனும் சண்டைக்கு வருகிறான். வரட்டுமே! அவனை ஒரே நொடியில் எமலோகம் அனுப்பி விடுகிறேன், பார்! நான் எவ்வளவு தீரமாகச் சண்டை செய்கிறேன் என்பதை நீ நேரில் பார்க்கவேண்டும் என்றுதான் நான் உங்களை இங்கே வரவழைத்தேன். நான் சண்டை யிடுவதை நீ அருகிலிருந்து பார்க்க வேண்டும். ஆகைால் இந்த இடத்தில் உட்காருங்கள்" என்று சொல்லி, அவர்களைக் குகை வாயிலுக்குச் சமீபத்தில்;—சண்டை நடக்கும்போது அவர்களுக்கு உயிர்ச்சேதம் நேரிடக் கூடிய விடத்தில், உட்காரச் செய்தான். அந்த ஆபத்தான விடத்தில் அவர்களை அவன் உட்காரச் செய்ததன் கருத்தென்னவென்றால், சிவாஜியின் ஆட்கள் பலமுடையவர்களாக விருந்து ஒருகால் தான் தோல்வியடைய நேரிட்டால், காசிபாயும் தாதாஜியும் சிவாஜியினிடம் போய்ச் சேராதபடி அவர்களை கொன்று விட வேண்டும் என்பதே.

சிவாஜி சண்டைக்கு வருகிறாரென்று கள்வர் தலைவன் சொல்லியதைக் கேட்டு தாதாஜிக்கும் காசிபாய்க்கும் நம்பிக்கையும் தைரி

யமும் உண்டாய் விட்டன. தங்களை விடுவிப்பதற்காகத்தான் சிவாஜி வருகிறார் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். ஆனால், தங்களுக் குண்டான மகிழ்ச்சியை ஒரு விதத்திலும் அவர்கள் வெளிக்காட்ட வில்லை. அறிவாளியாகிய காசிபாய், சண்டை நடக்கப் போகிற அந்த ஆபத்தான இடத்தில் வேங்கடவாகு தங்களை உட்காரச் செய்ததன் கருத்தை யறிந்து கொண்டாள். அவள் வெங்கடவாகுவைப் பார்த்து,

"நீ சண்டை செய்யப் போகிற திறமையை நாங்கள் பார்க்க வேண்டுமானால், சற்று தூரத்தில் இருந்தால் தான் நன்றாகப் பார்க்கமுடியும். அதோ, அந்த குகையின் அந்தக்கோடியில் இருப்பதுதான் நல்லது" என்று சொல்லி தாதாஜியுடன் குகையின் கோடியில் போய் உட்கார்ந்து கொண்டாள். கள்ளன் அதற்கு ஒன்றும் தடை சொல்ல மாட்டாமல் "நீ சொன்னது சரிதான்" என்று சொல்லி வாளா இருந்தான்.

இச்சமயத்தில் ஒரு குதிரை வீரன் குகையண்டை வந்து குதிரை மேலிருந்து குதித்து அங்கிருந்தவர்களைப் பார்த்து, "வெங்கடவாகு என்பவர் யார்?" என்று கேட்டான். கள்ளர்கள் வெங்கடவாகுவைச் சுட்டிக் காட்டினார்கள்.

"ஆம். நான்தான். நீ யார்? என்ன செய்தி கொண்டு வந்தாய்?" என்றான் கள்வர் தலைவன்.

"நான், தேசியத் தலைவராகிய சிவாஜியின் தூதன். நீர் எங்கள் தலைவருடைய சினேகிதரான தாதாஜியையும் அவர் மகள் காசிபாயையும் சிறைப்பிடித்து வைத்திருப்பதை அறிந்து அவர் மிகுந்த கோபங் கொண்டிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு, மேலும் அத்தூதன் பேசியபோது சற்று உரத்த குரலாக அங்குள்ள எல்லோருக்குங் கேட்கும்படி

"எங்கள் தலைவர் சிவாஜி, நீங்கள் சிறைப்பிடித்துள்ள தாதாஜியையும் காசிபாயையும் இப்பொழுதே தம்மிடம் அனுப்பி விட வேண்டும் என்றும், நீங்கள் எல்லோரும் உடனே இந்த பாஜா குகையை விட்டுப் போய் விடவேண்டும் என்றும், உங்களுக்கு விருப்ப மிருந்தால், கொள்ளைத் தொழிலை விட்டு விட்டு, அவருடைய தேசிய சேனையில் சேர்ந்து கொண்டு மாதச் சம்பளம் பெற்று கௌரவமாக வாழலாம் என்றும், அவர் உம்மிடம் சொல்லும்படி என்னை அனுப்பினார்" என்று குதிரைவீரன் சொன்னான்.

"சிறையாளிகளை அனுப்பா விட்டால்?" என்று வினவினன் கள்வர் தலைவன்.

"அனுப்பாவிட்டால், எங்கள் தலைவர் சிவாஜி வந்து உங்களைத் தக்கபடி தண்டிப்பார், உங்கள் ஒருவரையாவது உயிருடன் வைக்க மாட்டார்" என்றான் தூதன்.

"நல்லது. இதைப் போய்ச் சொல்லு. காசிபாய் என்னைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாள் என்றும், தாதாஜி இதற்குச் சம்மதித்து விட்டார் என்றும் சிவாஜிக்குச் சொல்லு. இன்னும் தாதாஜியும் காசிபாயும் இந்தக் குகையில் தான் இருக்கிறார்கள் என்றும் என்னுடன் சண்டை செய்து ஜெயித்து சிவாஜி அவர்களை மீட்டுக் கொண்டுபோக முடியாதென்றும், அப்படி மீட்டுக் கொண்டு போக நேரிட்டாலும் அதுவரையில், தாதாஜியையும் காசிபாயையும் உயிருடன் வேங்கடவாகு வைத்திருக்க மாட்டானென்றும் திட்டமாக சிவாஜிக்குச் சொல்" என்று கள்ளர் தலைவன் விடை சொல்லிவிட்டு, மேலும் தூதனைப் பார்த்து, "நீ தூது வந்ததற்காகவும் நீ பேசிய போது என் ஆட்களை வசப்படுத்தும்படியான சொற்களை அவர்கள் கேட்கும்படி உரத்த குரலாகப் பேசியதற்காகவும் இதோ இந்த வெகுமதியை வாங்கிக் கொள்" என்று சொல்லி, உறையுடனிருந்த தன் வாளை எடுத்து அவன் தலை மேல் தட்டினன். தங்கள் தலைவன் அவ்விதம் செய்ததைக் கண்ட கள்ளர்களும், தூதனைக் கல்லாலும் கட்டையாலும் அடித்துத் துரத்தினர்கள். ஆனல் அந்த சுறுசுறுப்புள்ள தூதன் பொள்ளெனக் குதிரைமேல் குதித்தேறி வேகமாகப் போய் விட்டான். கள்ளர்கள் வாயினல் சொல்லக்கூடாத சொற்களால் அவனைத் திட்டி ஆரவாரித்தார்கள்.

தூதன் வந்ததும் அவன் பேசியதும் கள்ளன் விடையளித்ததும் ஆகிய இவைகளையெல்லாம் கேட்டு குகைக்குள்ளிருந்த தாதாஜியும் காசிபாயும் தைரியமடைந்தார்கள். ஆனல், கள்ளன் சொன்ன விடையைக் கேட்டு ஒரு விதத்தில் பயமடைந்தார்கள். ஆகவே, அவர்கள் முன்போலவே கடவுளை மனதில் நினைத்து, சிவாஜிக்கு வெற்றியளிக்க வேண்டும் என்றும் தங்களைக் கள்ளரிடமிருந்து மீட்க வேண்டுமென்றும் துதித்தார்கள்.

ஸ்ரீமதி. சாரதா பாய் நாயுடு.

இவர் புனு சேவாசதனம் சங்கத்தாரால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு வைத்திய பரிசாரிகை (Nurse). உயர்தரப் படிப்புக்காக சீமைக்குச் செல்லுகிறர்.



சென்னை, பச்சையப்பன் தரும ஸ்தாபன டிரஸ்டி ஸ்ரீ. ஆர். எம். ஏ. முத்தைய செட்டியார் பி. ஏ. சர் அண்ணுமலை செட்டியார் குமாரர்.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது)

மூளை, அதிமேன்மையான பகுதியாகும்.

நற்பழக்கமோ துர்ப்பழக்கமோ மூளையில் எளிதாகவும் சீக்கிரமாகவும் பதிந்து விடுகிறது. அப்பழக்கம் ஒருதரம் மூளையில் பதிந்து விட்டால், பிறகு, அது ஒரு காலும் முற்றுங் கலைவதில்லை. மூளை மிகவும் மென்மையான பொருளானதால், அது எளிதில் சேதப்படுகிறது. ஒருதரம் தீய காரியத்தைச் செய்வதும், கெட்ட காட்சியைக் காண்பதும், நாவல் முதலிய மனத்தைக் கெடுக்குங் கதைப் புத்தகங்களைப் படிப்பதும், மனத்திற்கு அருவருப்பைத் தருங் கதைகளைக் கேட்பதும், அவை உயிருள்ளவரையும் ஞாபகத்திலிருக்கின்றன.

மெகு மென்மையாயுள்ள எந்தப் பொருளையும் வெகு சாக்கிரதையாகப் பாது காக்க வேண்டுமென்று நம் எல்லோருக்கும் தெரியும். ஆகவே,

மூளையானது அதிமேன்மையாகக் காக்கப்பட வேண்டிய பகுதியாகும்.

மூளையானது, மிக்க வலுவுள்ளதும், முழுதும் அடங்கக் கூடிய இடமுள்ள எலும்புப் பெட்டியாகிய தலையோட்டினுள்ளே வைக்கப்பட்டிருக்கிறது. மனிதனுடைய மூளைக்கு நேரிடும் அபாயம், வெளியே யிருந்துண்டாகுந் துன்பத்தினா லல்ல. ஆனால், வாயின் மூலமாக உட்கொள்ளும் விஷப் பொருள்கள் இரத்தத்திற் கலந்து, அவை மென்மையான மூளையின் ஒவ்வொரு கண்ணறைக்குஞ் செல்வதினாலே தான் அபாய முண்டாகின்றது.

மதுசாரம் மேன்மையான மூளையின் கண்ணறைகளைச் சேதப்படுத்துகிறது.

மதுசாரம் ஆவியா யெழும்புந் தன்மையுடைய தாதலால், அது சிறிதளவாயினும் கண்ணறைகளுக்கு ஆவியாய்ச் செல்லுகின்றது. அது முதலில் அவைகளுக்கு ஊக்கங் கொடுத்துப் பிறகு துர்ப்பலமாக்குகிறது. ஒரு கிளாஸ் (One Glass) மதுபானம்

அபாயத்தைத் தெரிவிக்கும் சிவப்பு நிறமான விளக்கொளியைப் பார்க்கக் கூடாதபடி மூளையின் வர்ணமறியும் இந்திரியத் (Sense) தைக் கெடுப்பதற்குப் போதுமானது. 1912-ம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு பயங்கரமான இருப்புப்பாதை விபத்தில் 40 பேர் காயமடைந்தன ரென்றும் 10 பேர் மாண்டன ரென்றும் டாக்டர் மக்கே (Dr. Mackay) கூறியிருக்கின்றனர். இவ்விபத்திற்குக் காரணம் புகை யந்திரஞ் செலுத்துவோன் அபாயக் குறியைக் காட்டுஞ் சிவப்பு விளக்கைக் கவனியாமல் அதனைக்கடந்து வேகமாய்ச் சென்றதேயாம். அவன் ஏன் கவனியாமற் சென்றானென்று விசாரித்ததில், அவன் வேலைக்குப் போகுமுன் மதுபானஞ் செய்திருந்தானாம்.

மூளை, தேகத்தில் அதி மென்மையானதும் பிரதானமானதுமானதால் அதனைச் சேதப்படுத்தும் பொருள்களால் அது கெட்டழிவதற்கில்லாமல், அப்பொருள்களை யொழித்து, அதனைப் பேணுதல் வேண்டும்.

கண்ணறைகளாகிய இடங்களும் (Centers) கண்ணறைகளின் கூட்டமும்.

பாடசாலையில் சிறுவர்களுக்கு வகுப்புகள் வகுத்திருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பும் குறித்த வேலையைச் செய்கிறது. அதுபோலவே, மூளையின் மென்மையான கண்ணறைகள் கூட்டங் கூட்டமாக வொன்று சேர்ந்து, அவைகளே மத்திய இடங்களாகி (Centres) அவ்வொவ்வொரு மத்திய இடமும் அது அதற்குரிய வெவ்வேறு வேலையைச் செய்கின்றது. தேகத்தில் பல வித மத்திய இடங்களுண்டு. அவ்வொவ்வொன்றும் இருதயத்தின் துடிப்பையும், சுவாசப்பையின் மூலமாய் மூச்சு விடுதலையும், தேகவுஷ்ணத்தைக் கிரமப் படுத்தலையும், தேகத்தின் நானுவகை அசைவையும் அடக்கியாளுகின்றது. மற்றவைகளின் மூலமாக, நமக்குப் பார்வையும் பரிச வுணர்ச்சியும் சத்தமும் சுவையும் கந்தமுந் தெரிகின்றன. அவைகளால் நாம் ஒரு சத்தத்திலிருந்து மற்றொரு சத்தத்தையும், ஒரு கந்தத்திலிருந்து மற்றொரு கந்தத்தையும் பகுத்தறிந்து சொல்லச் சக்திவாய்ந்திருக்கின்றோம். இன்னுஞ் சில, நமக்கு உருவம், வர்ணம், தூரம், பரிமாணம் இவற்றைத் தெரிவிக்கின்றன. பிறகு, நமக்கு ஞாபகம், நிர்ணயம் (Judgement), தன்னடக்கம் (Self Control) முதலியவேறு பல சக்திகள் இப்பலவித மத்திய இடங்களின் ஒன்றோடொன்றின்

தொடர்பினால் உண்டாகின்றன. இவையாவும் மூளையின் உத்தம மான பகுதிகளாகின்றன.

மூளை யெப்படி வளருகின்றது.

மேற்சொன்ன மத்திய இடங்களெல்லாம் ஒரே காலத்தில் வளர்ந்து முதிர்ச்சி யடைவதில்லை. அவற்றுள் சில, மற்றவைகளைப் பார்க்கினும் சீக்கிரமாக வளருகின்றன. அவற்றின் வளர்ச்சியைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னே மூளையின் கண்ணறை களைப் பற்றி இரண்டு விஷயங்களைத் தெரிந்து கொள்வோம். அவையாவன :—

1. மூளையின் கண்ணறைள் அதிமென்மையா யிருப்பதால்' அவை அதிவிரைவில் சேதப்படுகின்றன.

2, மூளைக்குக் கடைசியில் வருவன முதலில் போகின்றன. கடைசியில் வளருகின்ற மூளையின் பகுதிகளும். அவற்றின் சக்திகளும் அதி மென்மையானவை யானதால், அவை முதலில் சேதப்படுகின்றன.

அதெப்படி யென்று விசாரிப்போம்.

குழந்தை பிறந்ததும் அதன் மூளை முழு வளர்ச்சி பெறுவ தில்லை. அது அழுகிறதைத் தவிர வேறொன்றுஞ் செய்ய முடி யாது. அதன் தலையில் மூளையிருக்கின்றதாயினும் அதன் கண் ணறைகள் வேலை செய்யும் ஒழுங்கில் வரவில்லை. அவை அவ்வாறு வரும் வரையில் மூளையினால் குழந்தைக்கு மிக்க உபயோகமில்லை.

குழந்தை பிறப்பதற்கு முன் "முதலாம் மத்திய இடம்' "(Centre 1\" அதாவது இருதயம் வேலை செய்யத் தொடங்கிக் குழந்தையின் இருதயம் அடிக்கத் தொடங்கிக் குழந்தை உயிரோ டிருக்கிறது.

குழந்தை பிறந்ததும் அழத்தொடங்குகிறது. அவ்வழுகை சுவாசப்பையை வேலை செய்யத் தூண்டுகிறது. ஏனெனின், வேறு சில கண்ணறைகள் குழந்யைின் மூச்சை இயக்க "இரண்டாம் மத் திய இடம்" ("Centre 2") அதாவது, சுவாசப்பை (Lungs) ஏற் பட்டிருப்பதால், குழந்தை மூச்சுவிடத் தொடங்குகிறது.

குழந்தை பிறந்ததுங் கையையுங் காலையும் உதற ஆரம்பிக்கிறது. ஆனால், "மூன்றும் மத்திய இடம்" ("Centre 3") அதாவது, தசைகள் வேலை செய்யுங் கிரமத்தில் வராத வரையுங் குழந்தை நிற்கமுடியாது. தசைகள் வேலை செய்யுங்கிரமத்தில் வந்ததுங் குழந்தை நிற்கவும், நடக்கவும், ஓடவுங் கூடும். தசை வளர்ச்சி பெறும்போது மூளையின் வளர்ச்சி நின்றுவிடுமாயின், அக்குழந்தையின் உடம்பு பருத்து மிகப்பல முள்ளதாக வளரலாம்; ஆனால், அது முடமாயிருக்கும். முடமாயினும் வேறு கண்ணறைகளின் தொகுதி வேலை செய்ய, "நாலாம் மத்திய இடம்" ("Centre 4") அதாவது மனம் ஏற்படுகின்றது. "மூன்றும் மத்திய இடம்" ("Contre 3") அதாவது தசைகள் அசைவதற்குக் குழந்தைக்குக் கற்பிக்கிறது போலவே, "நாலாம் மத்திய இடம்" ("Centre 4") அதாவது மனம் குழந்தையின் மனத்தை யடக்கியாளுகிறதன்றி, ஒன்றை யறிந்து கொள்ளவுங் கற்பிக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் நடைபெறுவதால் கண்ணறைகள் நல்ல வேலை செய்யும் ஒழுங்கில் வருகின்றன. அதனால், குழந்தை அதிகங் கற்றுக் கொள்ளுகிறது, அதிகம் அறிந்து கொள்ளுகிறது. ஆனால், நான்காம் மத்திய இடத்தில் (at Centra 4) மனம் வளர்ச்சி பெறும் போது மூளையின் வளர்ச்சி நின்று விடுமாயின் அந்தப் பிள்ளை சாமர்த்திய முள்ளதாக வளரலாம். ஆனால், அது துட்ட செய்கையுள்ளதாயிருக்கும். எப்படி யெனின், அப்பிள்ளை பெரியவனானால், இது ஒழுங்கு, இது தவறு, இந்தக் காரியஞ் செய்யலாம், இந்தக் காரியஞ் செய்யலாகாதென்று சொல்லத் தெரியாதவனா யிருப்பான்.

மேற்சொன்னவையன்றி அவைகட் கெல்லாம் மேலான மத்திய இடம்" ("Centre 5") அது சரியானதைச் செய்யவும், தவறுனதைத் தள்ளவும் சக்தி கொடுக்கிறது. அது " உயர்ந்த மாணிக்கம்". அதுதான் மூளையாகிய உத்தம பகுதி. அப்பகுதி யில்லையாயின், ஒரு சிறுவன் நற்குண முடைய புருடனாகவும், ஒரு சிறுமி நற்குணமுடைய பெண்பாலாகவும் வளரக் கூடுமானவர்களல்ல. அது எல்லாம் வல்ல இறைவனுக்கு இருப்பிடமாம். அங்கேதான் மனச்சாட்சி யிருக்கின்றது. அது எப்போதும் நம்மைத் தீமையை விலக்க எச்சரித்து நன்மையைச் செய்யத் தூண்டுகிறது. அப்பகுதியில்தான் தன்னடக்கம் (Self Control) இருக்கிறது. அது இல்லையாயின் எவனும் எவளும் விலங்கினும் மேம்பட்டவ ராகார்.

ஒவ்வொருவருக்குந் தன்னடக்கஞ் சிறந்ததாகும்.

தன்னடக்கம் இறுதியிலுண்டாகும் பகுதியென்று அறிதல் வேண்டும். இது மிக வுயர்ந்ததும், உத்தமமானதும், அருமை யானதுமான மூளையின் பகுதியாம். அது வளருவதற்குப் பல வருடங்களாகின்றன. ஒரு சிறுவன் தன் யௌவன பருவத்தில் சிலம்பப் பயிற்சியில் தேர்ச்சி யடைந்து கெட்டிக்காரனுகலாம். அவனே உண்மையில் அறிவிற் சிறந்தவனுவதற்கு இன்னும் நெடுநாட் செல்லும். ஏனெனின், தசைவளர்ச்சியினும் மனவளர்ச்சி சீக்கிரம் உண்டாவதில்லை. ஒருவனுக்குக் குணமஃமதல் எல்லாவற்றினும் மேலானதாதலால், அவனுக்குத் தன்னடக்கம் பூரணமாக அமைந்து அவன் சன்மார்க்கனுவதற்கு அதனினும் நாள் செல்லும்.

மூளையின் கண்ணறைகள் தசையின் கண்ணறைகளினும் மிகுமென்மையானவை. ஆனல், மூளையிலுள்ள சிலகண்ணறைகள் மற்றக் கண்ணறைகளினும் மிக எளிதில் (தொட்டாற் சுருங்கியைப் போல) உணரக் கூடியனவாயும் மிக மென்மையானவையாயுமிருக்கின்றன. கண்ணின் கண்ணறைகள் பரிசக் கண்ணறைகளினும் மிக எளிதில் சேதப்படக் கூடியன. இது சரி இது தவறு என்று கற்பிக்கிற மூளையின் அந்தப்பகுதி மற்றப் பகுதிகளெல்லாவற்றினும் அதிக உணர்ச்சி யுள்ளதாகக் காணப்படுகிறது. ஒரு பையன் அடிக்கடி பொய் சொல்லி வருவானுனல் அப்பழக்கம் அவனுக்கு வழக்கமாய் விடுகிறது. (Practice forms habit) பிறகு, அவனுக்கு உண்மை பேசுவது மிக்க கடினமாகிறது. அதுபோலவே ஒருவன் மீண்டும் மீண்டும் தீய காரியங்களைச் செய்வதால், அது அவனுக்கு வழக்கமாய் விடுகிறது. அவனுக்கு மனச்சாட்சியும் உறங்கி விடுகிறது. இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்து வருபவன் தனது துர்வழக்கத்தை யொழிக்க வேண்டுமென்று ஒருகால் கருதுவானுயின், அது அவனுக்கு வருத்தமான வேலையாகிறது.

கெட்ட பழக்கத்தால் கெட்ட வழக்க முண்டாவது போலவே, நற்பழக்கத்தால் நல் பழக்க முண்டாவதும் சுலபமான தென்பதை நாம் மறந்து விடல் கூடாது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்றுங் கேட்டிருக்கின்றேம். ஒரு செய்கையை மீண்டும் மீண்டுஞ் செய்வதால் அது பழக்கத்துக்கு வருகிறதென்றும்,

பிறகு, அப்பழக்கமே வழக்கமாய் விடுகிறதென்றுந் தெரிந்து, அறிவுடைய பெரியோர்கள் ஒருவனுக்குச் சாது சங்கப் பழக்கமிருக்கவேண்டும், அதுவே நன்னெறிக்குக் கொண்டு போகுமென்று கூறியிருக்கின்றனர்.

எண்ணத்தை விதைக்கச் செய்கையை யறுப்பாய்
செய்கையை விதைக்கப் பழக்கத்தை யறுப்பாய்
பழக்கத்தை விதைக்கக் குணத்தை யறுப்பாய்
குணத்தை விதைக்க விதியை யறுப்பாய்.

ஆகையால், நாம் எண்ணும் எண்ணங்களிலிருந்தே நன்மை தீமைகள் உண்டாகின்றன வென்று தெரிந்து கொள்ள வேண்டும். "வினையை விதைத்தவன் வினையை யறுப்பான்," தினையை விதைத்தவன் தினையை யறுப்பான்" அல்லவா?

"உண்மை, நல்லொழுக்கம், நீதி, தூய்மை, அன்பு, நற்செய்தி முதலிய விஷயங்கள் எவையாயிருப்பினும், அவற்றின் மீதே நம் எண்ணஞ் செல்லவேண்டும்" என்று செயின்ட் பால் கூறுகின்றார்.

புத்தர் பிறந்த இடம்.

புத்தர் பிறந்த இடம் எதுவென்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்யும் சிலாசாசனக்காரர்களுக்குப் பயன் படக்கூடிய முக்கிய சிலாசாசனமொன்று இப்பொழுது கிடைத்திருக்கிறது. அதில் "இதுதான் புத்தர் பிறந்த இடம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது நேபாளத்தைச் சேர்ந்த தேரை என்ற இடமென நிச்சயமாகத் தெரிகிறது. ஒரிசாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சாசனம் உண்மையானதாயிருக்கும் பட்சத்தில் அதை நேபாளத்திலிருந்தே ஏதோ காரணங்களை முன்னிட்டுக் கொண்டு போயிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. 30 வருஷங்களுக்கு முன்னால் அசோகர் நிறுத்திய தூண்களில் ஒன்றை டாக்டர், பூரர் கண்டுபிடித்திருப்பதாகவும், அது நேபால் தேரையிலிருந்து கிடைத்ததாகவும், அதில் "இதுவே புத்தர் பெருமான் பிறந்த இடமாகும்" என்று எழுதி யிருந்ததாகவும் பண்டித பூக்லர் கூறினார். அதே போன்ற எழுத்துக்களை யுடைய மற்றொரு கல்லை இப்பொழுது ஒரிசாவில் புபனேச்வரருக்கருகில் கண்டெடுத்திருக்கிறார்கள்.

கவிச் சக்கரவர்த்தி ரவீந்திரர்

"மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகையில் ஸ்ரீ. சி. எப். ஆண்ட்ரூஸ் எழுதுவ தாவது:—

ஜப்பான் முதலிய கீழைத்தேசங்களுக்கு ரவீந்திரநாத தாகூருடன் நான் இருமுறை செல்லும் பாக்கியம் பெற்றேன். ஆனால் அவ்விடங்களுக்கு தாகூர் செய்த விஜயத்தை யொட்டி ஐரோப்பியர்கள் செவிக்கு அதிகம் எட்டி யிராதென்றே நம்புகிறென். எனவே அதைப் பற்றிய விவரத்தைக் கூறவேண்டியது அவசியமாகும். தாகூர் சீர சௌக்கிய மடைந்த பிறகு இங்கிலாந்து வர உத்தேசித்திருப்பதால் அவர் எத்தகைய மனிதரென்பதை ஐரோப்பியர்கள் அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அவர் கனவு காண்பவ ரென்றும், சாதாரண மனித வாழ்க்கைக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை யென்றும் அவர்பால் பலர் தப்பெண்ணங் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் கவி என்பதும் கனவு காண்பவர் என்பதும் உண்மையே. உலக சமாதானத்தை யொட்டி கீழைத்தேசங்களில் அவர் செய்த விஷயங்களைப் போல் தைரியமும், சாமர்த்தியமும் வாய்ந்தவர்களைத் தவிர வேறொருவராலும் செய்ய முடியாது. அவைகளை நான் கண்ணாரக் கண்டேன்.

ஜப்பானில் தாகூர் உபதேசம்.

1916-ம் வருஷம் யுத்த முழக்கம் கொந்தளித்துக் கொண்டிருக்கும் போது அவர் ஜப்பான் சென்றார். அவர் "தேசியம்" என்ற நூல் எழுதியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 1 ஜப்பானியரின் அழகும்,மதிப்பும் வெளி தேசங்களிலுள்ள யுத்த உணர்ச்சியினால் சிதறுண்டு கிடப்பதை அவர் கண்ணுற்று அதற்கு எதிராகப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். அதைக் கண்டு ஜப்பானிலுள்ள பிரபலமான பத்திரிகைகள், கவி தாகூர் கூறும் சாத்துவீகத் தன்மை ஆபத்துக்கிடமான தென்றும் அவர் இருக்கும் இந்தியா அடிமைத் தேசம் தானென்றும் அவர் தோல்வியுற்ற தேசத்தின் கவி யென்றும் ஜப்பான் பொது ஜனங்களை எச்சரிக்கத் தொடங்கி விட்டன. அப்போதுதான் கவி தாகூர் "தோல்வியுற்றவரின் கீதம்" என்ற ஓர் சிறந்த கவியை எழுதினார். அந்தச் செய்யுளின் ஆரம்பம் வருமாறு:—" பாதையோரத்தில்

உட்கார்ந்து கொண்டு, தோல்வி யுற்றவரின் கீதத்தைப் பாடும்படி எனது எஜமானன் எனக்குக் கட்டளை யிடுகிறார்.'' மேற்படி செய்யுளி லிருந்து இறைவன் தோல்வியுற்றவர்களுக்கே உதவி செய்வாரென்பதும், கர்வம், பணம், அதிகாரம், முதலியவைகளுடையவர்களுக்கு சிறிதும் ஆதரவளிக்க மாட்டாரென்பதும் நன்கு தெரிகிறது. "கடவுள் அதிகாரமும், கர்வமும் உடையவர்களை அவர்கள் ஆசனத்திலிருந்து கீழே விழ்த்தி அடக்கமும் மரியாதையு முள்ளவர்களையே உயர்ந்த ஸ்திதிக்குக் கொண்டு வருகிறார்" என்ற கீதையின் வாக்கியத்தை அது அனுசரித்திருக்கிறது.

2. இளங் குழந்தைகளின் கல்விச் சாலைகளைப் பார்வை யிடுவதற்காக அவர் ஒரு நாள் சென்றார். நானும் அவருடன் சென்றேனெனினும், விசேஷமாக யாதொன்றும் என் கண்ணிறகுப் புலப்பட வில்லை. ஆனால் அவர் மனம் ஆழ்ந்த யோசனையி லிறங்கியது. அங்குள்ள குழந்தைகள் எல்லோரும் ராணுவ உடையுடன் வந்திருப்பதை அவர் கண்ணுற்று, யுத்த முறையைக் கண்டிக்கும் தீர்மானத்தை இன்னும் உறுதியாகக் கூறத் தொடங்கினார். கர்வமுள்ள தேசீய உணர்ச்சியானது எத்தகைய விபரீதமான மனப்பான்மையை உண்டுபண்ணி யிருக்கிற தென்பதைக் குறித்து வருந்தினார். யுத்த உணர்ச்சியை அவர் பட்டவர்த்தனமாகக் கண்டித்ததைக் குறித்து கவி தாகூர்பால் ஜப்பான் ஜனங்கள் மரியாதையை இழந்து விடவில்லை. ஆனால் அவரது துணிவையும், உண்மையையும் பற்றி அவர்கள் ஆச்சரிய மடைந்தார்கள். மற்றோர் முறை அவர் அங்கு சென்றிருந்த பொழுது ஜப்பான ஜனங்கள் அவரை ஓர் தெய்வீக அவதாரமாகவே கருதினார்கள்- ஜப்பானில் பூகம்பத்தால் நேர்ந்த விபத்திற்குப் பின்பு தான் இந்த விஜயம் நேர்ந்தது. ஆசியாவிற்கு விரோதமாக அமெரிக்கர்கள் செய்த குடியேறும் சட்டம் ஜப்பானியர்களிடம் மிகவும் அவமான உணர்ச்சியை உண்டு பண்ணியது. இந்த சமயம் பல அனுபவம் பெற்ற ராஜீய நிபுணர்கள் அவரது பெருமையையும், மரியாதையையும், அமைதியான குணத்தையும் கண்டு அவருக்கு வெளிப்படையாக வந்தனமளித்தார்கள். அவர்மீது ஜப்பானியர்களுக்குள்ள அன்பை நான் அப்போது தெரிந்து கொண்டேன்.

சீன விஜயம்.

சீனாவிலும் மாணவர்களில் ஓர் வகுப்பார் முதலில் அவர் மீது தப்பெண்ணங் கொண்டார்கள். ஆனால், அது அவர் ஜப்பா

னில் பெற்ற அனுபவம் போலவே யிருந்தது. சீனவில் முன்னேற்ற மடைந்த சில மாணவர்கள், கவி தாகூரின் வீண் கனவுகளில் ஒருவரும் மனதைச் செலுத்த வேண்டாமென்று சீனர்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். பலர், கடவுள் நம்பிக்கை காலத்திற் கேற்ற செய்கை யல்ல வென்றும், பழமையான வழக்கமென்றும் அதைப் புறக்கணித்து விட்டார்கள். நவீன உலகத்தில் ஆயுதப் படைதான் பயன்தரக் கூடியதென நம்பிக்கை கொண்டார்கள். சீன யுத்த முறையைக் கைக்கொள்ள வேண்டு மென்பதே அவர்கள் கொள்கையாக இருந்தது. அவ்வித மிருக்க அவர்களை நமது கவி எவ்விதம் அவரது சாத்வீகத் தன்மையினலும், பயமற்ற, சாந்த குணத்தினலும் வசீகரித்தா ரென்பது ஓர் ஆச்சரியமான விஷயமாகும். அவர் மனமாகிய ஓர் பெரும் கிடங்கிலிருந்து கீழ்க்கண்ட உபநிஷத வாக்கியங்களை அச்சமயம் கூறினர்

"அநியாயம் செய்பவர்கள் சிலகாலம் செழித்தோங்கலாம், அவர்களது விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனல் இறுதியில் அவர்கள் அழிந்து நாசமாகி விடுவார்க ளென்பது நிச்சயம்."

பல நூற்றாண்டுகளாக இந்தியாவையும் சீனவையும் உயர்ந்த நிலையில் வைத்து வருவது அவர்களது உயர் வொழுக்கக் கொள்கைகள்தா னென்றும், அக்கொள்கை வேரறுக்கப்படு மாயின் சீனவும் இந்தியாவும் சிதைந்து விடுவதில் சந்தேகமே யில்லை யென்றும் அவர் கூறிய உபதேசம் அவர்கள் மனதில் ஊடுருவிப் பாய்ந்தது. அதனல்தான் அவர்கள் தாகூர் சென்ற பிறகு மகாத்மாவும் சீனவிற்கு வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். மேற்கூறிய முக்கியமான விஷயத்தில் தாகூரும் காந்திஜீயும் ஒரே அபிப்பிராய முடையவர்களாக இருக்கிறர்கள்.

மேனட்டு விஜயம்.

இரண்டு ஆண்டுகட்கு முன்னர் தாகூர் மேனடு சென்றிருந்த பொழுது இதாலி ஜனங்க ளிடத்தில் அவருக்குள்ள கருணையையும், நவீன ஐரோப்பிய அரசியல் நிலையில் அவருக்குள்ள அறியாமையையுங் கண்டு, அவரது கொள்கைகளெல்லாம் மிகவும் தவறு என மேனட்டினர் நினைத்துக் கொண்டு விட்டார்கள். ஆனல், அவர், தனக்கு சாத்வீகத்திலும், மானிடர்களின் சுதந்தரத்திலும் உள்ள மாற்ற முடியாத உறுதியைப் பற்றி "மாஞ்செஸ்டர் கார்டிய"னில் ஓர் முக்கியமான கடிதமெழுதி அத் தப்பெண்

ணத்தை மாற்றிக் கொண்டார். கவி தாகூரின் இங்கிலாந்தின் மீதுள்ள அன்பு எல்லோரும் அறிந்ததே. ஆனால் இப்போது இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் அபிப்பிராய பேதம் விருத்தி யடைந்து வருவதைப் பார்க்க அவர் மனம் வருந்துகின்றது. தவிர மேயோ எழுதிய நூல் இந்தியாவில் எவ்வளவோ கொதிப்பை உண்டு பண்ணியிருக்கிறது. சீக்கிரமாக இங்கிலாந்திற்கு தாகூர் விஜயம் செய்யும்போது இங்கிலாந்திலுள்ளவர்கள் அவரை அன்பாக வரவேற்று மேற்படி கொதிப்பு அடங்குப்படி செய்து இந்தியாவின் வெறுப் புணர்ச்சியை அகற்றுமாறு செய்ய வேண்டியது கடமையாகும்.



மகாத்மாகாந்தி, பர்தோலிப் போர்க்களம் சென்றிருக்கிறார்.

தருமம் தலைகாக்கும்.

பூர்வீக சரித்திரங்களையும், கர்ண பரம்பரைகளையும் ஆராய்ந்து பார்க்கின் தருமதேவதை நமது நாட்டில் தாண்டவமாடியதைப் போல் இதரதேசங்களில் இல்லையென்றே கூறலாம். கர்ன மகாராஜன யுத்த களத்தில் அவரது தருமம் தலைகாத்த விசேஷம் சரித்திர வாயிலாய் அறியக் கூடியது. மற்றும் சமீப காலத்தில் ஒரு தருமவானை அவரது தருமம் தலைகாத்த பின் வரும் சம்பவம் மகா ஆச்சரியமா யிருக்கிறது.

கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த விஜயபுரம் என்னும் ஊரில் பன்னிரண்டாம் செட்டி வகுப்பைச் சேர்ந்த சிதம்பரம் செட்டியார் என்னும் ஒரு சீமான் இருந்தார். இவருக்கு ஜவுளிக் கடை வியாபாரம். அவ்வூரிலுள்ள நெசவுகாரரெல்லாருக்கும் திரவியசகாயம் செய்து மலையாளத்து முண்டுகளை ஏராளமாய் உண்டு பண்ணி அவைகளைப் பொதி மாடுகளில் போட்டுக் கொண்டுபோய் மலையாளப் பிராந்தியங்களில் விற்பனையாக்கி விசேஷ லாபம் பெற்று வந்தார். அத்துடன் விவசாயத்திலும் அதிகப் பற்றுடையவராய் அநேகம் ஏகரா பூமிகளைப் பயிரிட்டுப் பெரிய குடித்தனக்காரராயு மிருந்தார். தினந்தோறும் ஏழை எளியவர்களுக்கும் தேசி என்று வருவோர்களுக்கும் இல்லையென்னாமல் பாத்திரமறிந்து பிச்சையிடும் வள்ளலாயு மிருந்தார். பஞ்சகாலத்தில் அவர் செய்த தருமத்தைப் போல் யாரும் செய்ததில்லை என்றே சொல்லுகிறார்கள். ஒருகால் நூறு பறையர்கள் இரவு காலத்தில் இவரின் தோட்டத்தில் வந்து சோளக்குழியைத் திறந்து ஒவ்வொருவரும் தாங்கள் சுமக்கக்கூடிய அளவு சோளத்தைத் துணிகளில் கட்டிக் கொண்டு புறப்படத் துணியும் தருணம் எண்ணிறந்த அவரின் பண்ணையாட்கள் பிடித்துக்கொண்டார்கள். இது செட்டியாருக்குத் தெரிந்தது. அவர் அவர்களை யாதொரு தொந்தரவும் பண்ணாமல் வைத்திருந்து விடியற்காலையில் தம்மிடம் அழைத்துக்கொண்டு வரும்படியாய் உத்தரவு செய்துவிட்டு விடிந்ததும் தனது மனையாளை விளித்து அந்நூறுபேர்களுக்கும் சமையல் செய்யும்படி ஆக்கியாபிக்கலானார். வேலைக்காரர்கள் பறையர்கள் நூறு பேரையும் செட்டியார் முன் கொண்டுவந்து நிறுத்தினர். அவர் அவர்களின் விருத்தாந்தங்களையும் யோக க்ஷேமங்களையும் விசாரித்த பின் தமது தாயாரை அழைத்து "அம்மா, நம்மை நாடி இத்தனை பேர்களும் இப்பஞ்சகாலத்தில் வந்து விட்டார்கள். என்னுடைய

தர்மம் சோளமாய் விட்டது. உங்கள் மருமகள் தருமம் சாதமாய் விட்டது. உங்கள் தருமமென்ன? வெறும் தானியத்தை கொண்டு போய் என்ன செய்வார்கள்? ஆதலால் இவர்களுக்கு ஆணம் காய்ச்சுவதற்காக ஏதேனும் கொடுங்கள்" என்றுகூற, அந்தம்மாள் "அப்பா எல்லாம் உன் பிரியம்போல் செய்து கொள்" என்று சொல்ல, உடனே இவர் தமது உக்கிராணக்காரனைக் கூப்பிட்டு "என்தாயார் தருமமாக பேருக்கு 2 வள்ளம் கொள்ளு கொடுத்து விடு" என்று திட்டம் செய்யலானார். அப்படியே தன் மக்கள் தருமமாக கொள்ளைக் கட்டிக்கொள்ள ஆளுக்கு ஒரு முண்டும் கொடுத்தார்.

நந்தனார் எல்லோரும் வயிறுர அன்னம் உண்டபின் இனி மேல் திருடுவதில்லை என்று பிரமாணிக்கம் செய்துவிட்டு "எங்கள் குலதெய்வமே! எங்கள் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் தங்களைக் கும்பிட்டுப் படுக்காமலிருப்பதில்லை" என்று கொள்ளும் சோளமும் கொண்டுபோய்த் தங்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றினர்.

இத்தகைய தருமப் பிரபுவின் வீட்டில் ஒருநாளிரவு சில திருடர்கள் கொள்ளையடிப்பதற்காகத் தீவட்டி போட்டுக்கொண்டு வந்தனர். வழக்கம்போல் சிதம்பரம் செட்டியாரவர்கள் தனது மேல் மெத்தையின் மீது அன்று உலாவிக்கொண்டிருக்கும்வேளை ஒரு மைல் தூரத்துக்கப்பால் தீவர்த்தி வெளிச்சத்தைக் கண்டு தனது வீட்டுக்கே அவர்கள் கொள்ளைக்கு வருகிறார்க ளென்றுணர்ந்து தனது குடும்பத்தார்களையும் வேலையாட்களையும் அப்புறப்படுத்தி விட்டுப் பணப்பெட்டிகளை யெல்லாம் கூடத்தில் பரப்பிவைத்துக் கொண்டு தான்மட்டும் ஒரு ஆசனத்தில் வீற்றிருந்து வெளிக் கதவைத் திறந்துவிட்டுத் திருடர்களின் வரவுக்கு எதிர் பார்த்திருந்தார். திருடர்கள் வந்ததும் வாசற்கதவு திறந்திருக்கக்கண்டு கேள்விமுறை யின்றித் தாராளமாய் உள்ளேசென்று ஒருவர் பின் ஒருவர் கூடத்துள் நுழைய முயலுங்கால் கூடத்தின் கதவின் இருபுறங்களில் இரண்டு பெரிய நாகசர்ப்பங்கள் எழுந்து நின்று முதல் முதலில் உட்புகுந்தவனைச் சடாரென்று போட அவன் அப்பாடாவென்று பின்னுக்குவிழ இரண்டாம் மனிதன் இது ஏதோ இரண்டகமாயிருக்கிறதென்று ஆங்காரத்துடன் செல்ல அவனும் பாம்புகளால் தீண்டப்பட்டு திடீரென்று குப்புறவிழ இப்படியே அடுத்தடுத்து ஐந்தாறு மனிதர்களுக்கு ஆபத்து நேர்ந்ததைக் கண்ட ஏனையோர் மிகுந்த அச்

தருமம் தலைகாக்கும்

தமிழ்நாடு ஆவணக் ...
210381

சமும் திகிலுங்கொண்டு கட்டுசெவியால் கட்டுண்டோர்களைத் தூக்கிச் சுமந்துகொண்டு வந்த வழியே திரும்பி விட்டனர். வெகு நேரம்பொறுத்து இவ்விஷயமறியாச் சிதம்பரம் செட்டியார் திருடர்கள் ஏது இன்னும் வரக்காணோமென்று வெளியே வந்து பார்க்கும்போது வாசல்வரை உதிரம் ஒழுகி யிருப்பதையும் தீவட்டிகள் அணைந்து அங்கு மிங்கும் அலங்கோலமாய்க் கிடப்பதையும் திருடர்களின் அடிச் சுவடுகளையும் பார்த்து அதிசயித்து ஒன்றும் தோன்றாமல் திரும்பக்கூடத்தில் நுழையுங்கால், அங்கு நின்ற சர்ப்பங்கள் அவருக்குக் காட்சிகொடுத்து மாயமாய் மறைந்து விட்டனவாம்.

(இந்து நேசன்.)

---

* * * * * * *

போலண்டு தேசத்தைச் சேர்ந்த டெக்லாக் என்ற இடத்தில் மணமகள் ஒருத்தி விவாகத்துக்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் அத்தேச சம்பிரதாயப்படி முத்தமிட்டாளாம், அவள் நான்கு மணி நேரம் இடைவிடாது 7001 முத்தங்க ளளித்திருக்கிறாளாம்.

* * * * * * *

உலகத்தில் மிக விலை யுயர்ந்த நாற்காலி கிறிஸ்தவர்களின் போப் குருவிடமிருக்கிறது. வெள்ளியினாலாய அதன் பெறுமானம் 18,000 பவுனாம்.

* * * * * * *

சமுத்திரத்திலுள்ள தண்ணீரை யெல்லாம் வற்றும்படி செய்தால் அதில் கிடைக்கும் உப்பை ஒரு மைல் கனமுள்ளதாக 5,000,000 சதுர மைல்கள் மீது பரப்பலாம்.

* * * * * * *

நியூயார்க் தெரு வீதிகளில் பஹிரங்க விபசாரிகள் 40,000 பேர் இருக்கின்றனராம். இந்தக் கணக்குப்படி நியூயார்க் ஜனங்களுள் 100-க்கு 2 வீதம் ஆகிறதாம்.

* * * * * * *

லண்டன் மிருகக்காட்சிச் சாலையிலுள்ள யானை யொன்றைப் போஷித்துவர வருடம் 120 பவுன்கள் ஆகின்றனவாம்.

* * * * * * *

ஜார்ஜ் அரசருக்குச் சொந்தமான ஸான்ட்ரிங்காம்எஸ்டேட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு ராஜ வைத்தியரே வைத்தியஞ் செய்வாராம். இதற்காக ஒவ்வொரு குடும்பத்தாரும் 2 அணா கொடுக்க வேண்டுமாம்.

விசேஷக் குறிப்புகள்

ஆஸ்பத்திரிக்கு 80000 ரூபாய்.

ஸேத்ராம்ஜி பகவான் தாஸ் என்ற பிரபல சர்க்கரை வியாபாரி தமது சகோதரரின் ஞாபகார்த்தமாக ஸர் ஹரீசன் தாஸ் நரோத்தம் தாஸ் ஆஸ்பத்திரிக்கு 80000 ரூபாய் கொடுத்திருக்கிறார்.

விவசாயிகளுக்கு 3 லக்ஷம்.

பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்கு விவசாயக் கடன் கொடுக்க கவர்ன்மெண்டார் இன்னும் 3 லக்ஷம் ரூபாய் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவில் நீர்ப்பாசன அபிவிருத்தி.

ஸர் ராபர்ட்டு காமலின் கேள்விக்கு ஏர்ல் வின்டார்டன் காமன்ஸ்-சபையில் பதிலளிக்கையில் 1926,27-ம் வருஷ ஆரம்பத்தில் இந்தியாவில் மொத்தம் 2800000 ஏக்கர்கள் நீர்ப்பாசனத்திற்குட்பட்டிருந்தன வென்றும், இப்பொழுது கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கும் பல வேறு திட்டங்களும் பூர்த்தியடைந்துவிடும் பக்ஷத்தில் மொத்தம் 40,000,000 ஏக்கர்கள் நீர்ப்பாசனத்திற்குட் பட்டிருக்கு மென்றும், இந்தப் புள்ளி விவரம் கவர்ன்மெண்டு பரிசீலனையிலிருந்து மாத்திரம் அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார்.

ஐந்து வயதில் பெரியவன்.

ஸ்லோவாகியா நாட்டிலுள்ள ஐந்து வயதுச் சிறுவன் அதிசய மூளை யுள்ளவனாக இருக்கின்றான். அவனுக்கு இப்போது வயது ஐந்து தான் ஆகிறது. கிறிஸ்து பிறந்ததிலிருந்து இன்றுவரை எத்தனை நாட்கள் என்று கேட்டதற்கு அவன் சரியான பதில் தந்தான். ஒருவன் பிறந்த நாளைக் கொடுத்து இன்று அவன் வயதென்ன என்றால் நிமிஷம் தவறாமல் விரைவில் பதில் சொல்லுகின்றான். அவனுடைய தலை மிகப் பெரியதா யிருப்பதால் அவனுக்கென்று தனியாக அளவெடுத்துத் தொப்பி செய்ய வேண்டியிருக்கின்றது.

விசேஷக் குறிப்புகள்

குதிரையின் வீரம்.

அமெரிக்காவில் ஓர் ஊரில் வெள்ளப் பெருக்கெடுத்த ஒரு நதியால் பெருஞ் சேத மேற்பட்டது. ஒரு கழனியில் நீர் பாயவே அங்கு மேய்ந்து கொண்டிருந்த ஒரு கிழக் குதிரையும், ஒரு இளங் குதிரையும், நீரி லகப்பட்டுக் கொண்டன. இரண்டும் நீந்திக் கரை யேற முயற்சித்தன. ஆனால் கிழக் குதிரை இடையிலேயே பலமற்றுத் தண்ணீரில் மூழ்க ஆரம்பித்தது. இளங் குதிரை அதைக் கண்டு அதன் அருகே சென்றது. உடனே கிழக் குதிரை அதன் பிடரி மயிரைக் கடித்துப் பிடித்துக் கொண்டது. இளங் குதிரை மிகவும் கஷ்டப் பட்டு நீந்திக் கரை சேர்ந்தது. இளங் குதிரையால் கிழக் குதிரை உயிர் தப்பிற்று.

நல்ல ஜோடி.

தன் மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக பம்பாயிலுள்ள ஒரு நாவிதன், இருபது வருடத் தண்டனை பெற்று அந்தமான் தீவுகளுக்கு அனுப்பப் பட்டான். அங்கு அவனைப் போல, தன் கணவனைக்கொன்ற குற்றத்திற்காகச் சிறை செய்யப்பட்ட ஒரு மாதைக் காண, இருவரும் காதல் கொண்டனர். மணமும் நடந்தது. தாய் நாடு திரும்பி இருவரும் சிறந்த தம்பதிகளாக வாழ்ந்து வருகிறார்களாம்!

காலால் எழுதும் வாலிபன்,

திருவாங்கூரில், நெய்யாற்றங்கரை என்னுமிடத்தில் ஓர் நாடார் வகுப்பு இளைஞன் கால்களினாலேயே சகல வேலைகளையுஞ் செய்கிறானாம். அவனுக்குக் கைகளே கிடையா. ஏழாவது வகுப்புவரைப் படித்திருக்கிறான். திவானுக்குத் தன் காலினால் ஓர் விண்ணப்பம் எழுதி யனுப்பியதின் பயனாக அவனுக்கு தினந் தோறும் கொஞ்சம் அரிசி அளிக்கப்பட்டு வருகிறது. காலினால் கல்லெறிந்து தென்னங் குலைகளையும் பாக்குக் குலைகளையும் கீழே விழச் செய்வதைப் பார்த்து யாவரும் ஆச்சரியப்படுகிறார்களாம்.

கலப்பு விவாகம்.

குண்டூர் அசிஸ்டெண்டு என்ஜினியரான திரு. ராஜகோபால் ஐயங்காரின் புதல்வி ஜானகி குண்டூர் காட்டிலாகா உத்தியோகஸ்தரான 40 வயதுள்ள அப்துல் கரீம் என்னும் முகமதியரை இம் மாதம் 7-ம் தேதி பிரமசமாஜக் கொள்கைப்படி மணந்து கொண்டாள். ஜானகி காசியிலும் டில்லியிலும் படித்து வந்த பொழுது

முகமதியர்களுடன் சிநேகமாக விருந்தபடியால் அவளுக்கு ஜாதி மத பேத உணர்ச்சி அற்று விட்டதென்று அவள் தந்தை கூறியிருக்கிறார். கணவனும் மனைவியும் தங்கள் தங்கள் மதத்திலேயே இருப்பார்களாம்.

லண்டனில் இப்பொழுது 900 துப்பறிபவர்கள் இருக்கின்றனராம்.

ஸோயா என்ற தானியத்திலிருந்து பால் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலிலிருந்து பர்லாடைக் கட்டியும் செய்யலாமாம்.

மிஸ் கன் என்ற ஒரு மாது 18 அடி 7 அங்குல தூரம் தாண்டுவாளாம். இதற்கு அதிகமாக இதுவரை ஒருவரும் தாண்டியதில்லை.

86 அடி குறுக்களவுள்ள பலூன் விமானம் ஒன்று ஜர்மனியில் கட்டப்பட்டு வருகிறது. இது 9 மைல் தூரம் உயரச் செல்லுமென எதிர் பார்க்கப் படுகிறது.

விதிவசத்தில் ஆழ்ந்த நம்பிக்கை யுள்ளோர்களே பெரிய பயங் கொள்ளிகளாக இருக்கின்றனர்.

துறைமுகத்தில் பிசாசு.

கிட்டப்பூர் துறைமுகத்தில் தொடர்ந்தாற்போல் மூன்று தினங்கள் கான்ஸ்ட்டபிள்கள் பிசாசால் அறையபட்டனராம். இரண்டு போலீஸ்காரர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றனர். இந்தப் பிராசு ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட மணி நேரத்திலேயே தோன்றுகின்றதாம். இதை இரவில் பரிசோதிக்கச் சென்றவர்கள் ஓர் ஆட்டிக்குட்டியைத் தவிர வேறொன்றையுங் காணவில்லையாம்.

அல்பேனியாவின் வாலிப அரசர்.

அல்பேனிய அரசாங்கத்தின் தலைவரான அஹமத் ஜூஹ் ஹோபேக் என்பவர் 34வயதுள்ளவர். தம்முடைய தேசத்திலுள்ள வகுப்புத் தலைவர்கள் அவருக்குத் தலைவணங்கு முறையில் அவர் திறமையாய் ஆட்சி செய்து வருகிறாராம். இவர் 16 வயது இளைஞராயிருக்கும் போதே ஒரு கலகத் தலைவராயிருந்தாராம். அக் காலத்திலேயே அவர் அல்பேனிய அரசாங்கம் நிணறம்படி செய்துவிட்டனராம். இவர் தம்முடைய 22 வயதில் மந்திரி பதவியையடைந்தார். இவர் இத்தாலியருடன் அதிக சினேகப் பான்மையுள்ளவராய் இத்தாலிய மந்திரி முஸ்ஸோலினியின் ராஜீயக் கொள்கைதனையே பின்பற்றி வருகிறார்.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0 0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8 0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40 0 0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50 0 0

சிறந்த வாசனை

ஊதுவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர் 1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,, 1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,, 1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,, 1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post ox No. B, MADRAS.

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாமிருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதரோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுச்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப்பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, Post Box 287, Madras.

K. S. முத்தையா கம்பெனி, புத்தகசாலை.

மனோஹரி.

அழகியதோர் கதை. இதில் விக்கிரமகேதுவின் தீச்செயலால் "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும், மனோஹரி என்னும் பெண் தன் தகப்பனார் கிழட்டு அரசனுக்கு மணம் செய்துவிக்கப் போனார் என்பதைக் கேள்விப்பட்டு தனது நந்தவனத்தின் பக்கம் வந்த குணசீலன் என்ற வேறொரு நாட்டு இளவரசனுடன் ஆண் வேடம் பூண்டு இரவு 12 மணிக்கு பின் பற்றிச் செல்வதும் நந்தவனத்தில் வைத்து காதலர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணைகளின் பேரில் இருவரும் காதலித்துக் கொண்டவைகளையும் படிக்கப்படிக்க மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

விலை அணா 0—8—0.

மணிவடக்களவு

பட்டப்பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தினமாலையை திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணா 0—4—0.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்ரி

யூனிவெர்ஸல் பாட்ரி

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும். இந்தியர்களின் வீட்டில் சமையல் செய்யும்பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள் இந்துக்களாலும், மகமதியர்களாலும் கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை.

நெ. 1	செட் 1-க்கு	விலை	ரூ.	4—8—0
,, 2	,,	,,	,,	,,	3—8—0
,, 3	,,	,,	,,	,,	2—0—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, : : சென்னை.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் சண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற
எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,
106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு!

பன்னிரு இதழ்களையும் ஒன்ருய்ச் சோத்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.
3-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, 99, :: :: சென்னை.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-௵ ஸ்தாபிக்கப்பட்டது)

இது இராஜக்கள், ஜமீன்தார்கள். கோடீஸ்வரர்கள் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.

REGISTERED TRADE MARK

REGISTERED TRADE MARK

K. தாவுத் ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும், சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அநேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம்: உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்காதாரமானது. ஜெகத்தோர் மெச்சும்,

அரைக்கீரைவிதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு, அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், ஸ்தூரி, அம்பர், ஜவ்வாது பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை. அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸரி பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து பருவு நிவாரணி, வாசனைப் பாக்கு. சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப் பவுடர், தங்கம் வெள்ளி ரேக்கமைந்த ஏலங் கிராம்பு வகையறா, சுருள் நைஸ் கொட்டைப் பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைக்கும், பல இடங்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை. ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்,

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்

தந்தி விலாசம்:—“ஸெண்ட்மால்.”

ஆதிப்ரிமளச் சாலை, 311, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அசல் ஷண்முகம் பட்டணம்பொடி

அநேக மேடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதரூஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.	விலை.	தபால்சிலவு.	பாக்கிங்.	மொத்தம்.
8	ரூ. 1 0 0	0 5 0	0 1 0	1 6 0
20	,, 1 12 0	0 8 0	0 2 0	2 6 0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம் ஒற்றைத் தலைவலி, மண்டைகுதல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதரூஸ்.

ஹூமுனியோஹா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாம்த வண்ணானுக்குப் போடலாம். சேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah &Co.,

Post Box 99. MADRAS.

2(038)

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா; விளிம்புக் கரைக்கு ஜரிகையினுல் "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முக தலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை!

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38—0—0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44—0—0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30—0—0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36—0—0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு மிருதுவாகவும் பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் கிராக்ஷைக் கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52—0—0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60—0—0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT.

Post Box 99, **MADRAS.**

Show room: 287, Esplanade. *Phone: No. 2693.*

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது 1½ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும் பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைபுளு முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வாக் கூடியதாயு மிருக்கும்.

16 முழ x 44" புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - - MADRAS.

Show room: 287, Esplanade. *Phone: No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.